**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**E.A.No.01/2025 and E.A.No.02/2025**
**in**
**E.P.No.17/2021**
**in**
**O.S.No.113/2006**

வேலுச்சாமி கோனார் (இறப்பு) ... வாதி

1. சண்முகத்தாய்
2. கருப்பசாமி
3. மாரியம்மாள்
4. துரைச்சி
5. கோட்டைசாமி
6. மஞ்சு
7. மகேஸ் ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/ இறந்துபோன வாதியின் வாரிசுகள்

/எதிர்/

குருசாமி ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுக்களானது 10.10.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கனகராஜா அவர்கள் ஆஜராகியும், மனுக்கள், எதிருரைகள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:51:11 +0530

**<u>பொதுவான உத்தரவு</u>**

மனுதாரரால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 7 விதி 14(3) ஆகியவற்றின் கீழ், நிறைவேறுதல் மனுவில் இன்று (19.07.2025) வாதுரைக்காக ஏற்படுத்தியுள்ள வாய்தாவை மாற்றி மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக நிறைவேறுதல் மனுவினை மறுதிறவு செய்யக்கோரியும், பிரதான நிறைவேறுதல் மனுவில் இதன் மனு ஆதரவு விபரத்தில் கண்ட ஆதரவான இறந்துபோன வாதி வேலுச்சாமி என்பவரின் இறப்பு சான்றிதழை மனுதாரர்கள் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிட வேண்டியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட E.A.01/2025 மற்றும் E.A.No.02/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–</u>**

பிரதான நிறைவேறுதல் மனுவை இறந்துபோன மனுதாரர்களின் தந்தையான வாதிக்கு எதிர்மனுதாரர் பிறப்பித்துக் கொடுத்த தாவா அடமான ஆவணத்தில் கண்ட அசல், வட்டித் தொகைகளை பொறுத்து பிரதான வழக்கில் 10.09.2008 மற்றும் 10.09.2013 தேதிகளில் பிறந்த முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையை அனுசரித்து, தாவா அடமான சொத்தை ஏலம் கொண்டு வந்து, அந்த ஏலத் தொகையை இத்தீர்ப்பாணை தொகைக்கு ஈடு செய்து கொள்ளும் பொருட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதான நிறைவேறுதல் மனுவில் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி அவரது தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்ததுடன், நிறைவேறுதல் மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாகவும் இந்நீதிமன்றத்தில் தோன்றி சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அவ்விதம் எதிர்மனுதாரர் தனது தரப்பில் தாவா அடமான தொகையை கடந்த 30.09.2013 தேதியன்றே வாதி வசம் கொடுத்துவிட்டதாக மோசடியாக கட்சி செய்துவருகிறார் என்றும், ஏனெனில் வாதி கடந்த 20.05.2013 தேதியிலேயே இறந்துவிட்ட நிலையில், அதற்கு பிற்பாடு இறந்துபோன வாதியிடம் எதிர்மனுதாரர் 30.09.2013 ல் தொகை செலுத்திவிட்டதாக தெரிவித்ததிலிருந்தே எதிர்மனுதாரரின் மோசடியான எண்ணம் நன்கு துலங்கும் என்றும், எனவே

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:51:19 +0530

மேற்கண்ட வாதி வேலுச்சாமி என்பவரின் இறப்பு சானறிதழை மனுதாரர்கள் தரப்பு சான்றாவணமாக நிறைவேறுதல் மனுவில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமானதாகும் என்றும், அவ்விதம் வாதியின் இறப்பு சான்றிதழை குறியீடு செய்தால் மட்டுமே, எதிர்மனுதாரர் செய்து வரும் பொய்யான கட்சியை இந்நீதிமன்றத்திற்கு நிரூபிக்கவும் இயலும் என்றும், மேலும் வாதியின் இறந்த தேதியை இந்நீதிமன்றத்திற்கு ருசு செய்து கொள்ளவும் இயலும் என்றும், ஆகையால், நிறைவேறுதல் மனுவில் இன்று (19.07.2025) வாதுரைக்காக ஏற்படுத்தியுள்ள வாய்தாவை மாற்றி மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக நிறைவேறுதல் மனுவினை மறுதிறவு செய்யக்கோரியும், பிரதான நிறைவேறுதல் மனுவில் இதன் மனு ஆதரவு விபரத்தில் கண்ட ஆதரவான இறந்துபோன வாதி வேலுச்சாமி என்பவரின் இறப்பு சான்றிதழை மனுதாரர்கள் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிட வேண்டியும் இம்மனுக்கள் மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட E.A.01/2025 மற்றும் E.A.No.02/2025-ன் எதிருரைகளின் சுருக்கம்:-**</u>

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் கூறும் இறந்துபோன வாதியான வேலுச்சாமிக்கோனார் என்பவர் அசல் வழக்கின்படி எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய தீர்ப்பாணைத் தொகையை கடந்த 30.09.2013 தேதியில் உயிருடன் இருந்து எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், அவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பதையும், மேற்படி தேதியில் மேற்படி இறந்துபோன வாதியான வேலுச்சாமிக்கோனார் உயிருடன் இருந்தார் என்பதையும் எதிர்மனுதாரர் தனது தரப்பு சாட்சியங்களின் மூலம் இந்நீதிமன்றத்தில் இம்மனுவில் நிரூபணம் செய்துள்ளார் என்றும், உண்மையில் மனுதாரர் தனது மனு அபிடவிட்டில் 10.09.2008 மற்றும் 10.09.2013 தேதிகளில் பிறந்த முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையை அனுசரித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டு கூறியுள்ள நிலையில் மனுதாரர் கூறியுள்ளதுபோல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:51:26 +0530

இறந்துபோன வாதியான வேலுச்சாமி கோனார் மனுதாரர் கூற்றுபடி 20.05.2013 தேதியிலேயே இறந்துபோயிருந்தால் மேற்படி அசல் இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் வாதியான வேலுச்சாமிக்கோனார் இறந்ததை இந்நீதிமன்றத்தில் தெரிவித்தும், அதேபோல் மனுதாரர்கள் வழக்கு தரப்பினர்களாக சேர்ந்து இறுதிநிலை தீர்ப்பாணை பெற்றிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாத நிலையில் மனுதாரர்கள் இறந்துபோன வாதி வேலுச்சாமி கோனார் 20.05.2013 தேதியில் இறந்துபோய்விட்டார் என கூறியுள்ளது மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டிலிருந்தே பொய் என்பது நன்கு துலங்கும் என்பதுடன் மேற்படி இறந்துபோன வாதியான வேலுச்சாமிகோனார் உயிருடன் இருந்தார் என்பது நன்கு துலங்கும் என்றும், அதேபோல் இறந்துபோன வாதியான வேலுச்சாமிக்கோனார் மனுதாரர்களுடைய கூற்றுப்படி 20.05.2013 தேதியிலேயே இறந்துபோயிருந்தால் மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யும்போதே அவருடைய இறப்பு தேதி மற்றும் இறப்பு சான்று குறித்து குறிப்பிட்டு இந்நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், அவ்வாறு தாக்கல் செய்யாததிலிருந்தே மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தை துய கரங்களுடன் அனுகவில்லை என்பதுடன் இறந்துபோன வாதி வேலுச்சாமி கோனாரின் இறப்பு குறித்து மோசடியாக ஆவணங்கள் தயார் செய்யும் உள்நோக்கத்துடனே மனுதாரர்கள் இருந்து வந்துள்ளார்கள் என்பதும் நன்கு துலங்கும் என்றும், அதேபோல் மனுதாரர்கள் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்துபோன வாதியான வேலுச்சாமிக்கோனார் எதிர்மனுதாரரிடமிருந்து இவ்வழக்கின் தீர்ப்பாணையின் படியான தொகையை உயிருடன் இருந்து பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை இந்நீதிமன்றத்தில் உரிய சாட்சிகள் மூலம் நிரூபித்த பின்பு தற்போது மனுதாரர்கள் மேற்படி இறந்துபோன வாதி வேலுச்சாமிகோனார் 20.05.2013 தேதியில் இறந்தார் என மோசடியாக பின்னிட்டு இறப்புசான்று தயார் செய்து அதனை காலபிற்பாடாக மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யவேண்டும் என்று கோரியும் அதற்கு இந்நிறைவேறுதல் மனுவை Re-Open செய்ய வேண்டுமென கோரியும் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:51:34 +0530

ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் E.A.No.02/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் காலதாமதமாக தற்பொழுது E.P.No.17/2021 மனு வாதுரைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

6) மனுதாரர்கள் தரப்பில் இம்மனுக்களில் எதிர்மனுதாரர் தனது தரப்பில் தாவா அடமான தொகையை கடந்த 30.09.2013 தேதியன்றே வாதி வசம் கொடுத்துவிட்டதாக மோசடியாக கட்சி செய்துவருகிறார் என்றும், ஏனெனில் வாதி கடந்த 20.05.2013 தேதியிலேயே இறந்துவிட்ட நிலையில், அதற்கு பிற்பாடு இறந்துபோன வாதியிடம் எதிர்மனுதாரர் 30.09.2013 ல் தொகை செலுத்திவிட்டதாக தெரிவித்ததிலிருந்தே எதிர்மனுதாரரின் மோசடியான எண்ணம் நன்கு துலங்கும் என்றும், எனவே மேற்கண்ட வாதி வேலுச்சாமி என்பவரின் இறப்பு சானறிதழை மனுதாரர்கள் தரப்பு சான்றாவணமாக நிறைவேறுதல் மனுவில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமானதாகும் என்றும், அவ்விதம் வாதியின் இறப்பு சான்றிதழை குறியீடு செய்தால் மட்டுமே, எதிர்மனுதாரர் செய்து வரும் பொய்யான கட்சியை இந்நீதிமன்றத்திற்கு நிரூபிக்கவும் இயலும் என்றும் கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:51:43 +0530

7) மேலும், இம்மனுக்களின் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கூறியுள்ளதுபோல் இறந்துபோன வாதியான வேலுச்சாமி கோனார் மனுதாரர் கூற்றுபடி 20.05.2013 தேதியிலேயே இறந்துபோயிருந்தால் மேற்படி அசல் இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் வாதியான வேலுச்சாமிக்கோனார் இறந்ததை இந்நீதிமன்றத்தில் தெரிவித்தும், அதேபோல் மனுதாரர்கள் வழக்கு தரப்பினர்களாக சேர்ந்து இறுதிநிலை தீர்ப்பாணை பெற்றிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாத நிலையில் மனுதாரர்கள் இறந்துபோன வாதி வேலுச்சாமி கோனார் 20.05.2013 தேதியில் இறந்துபோய்விட்டார் என கூறியுள்ளது மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டிலிருந்தே பொய் என்பது நன்கு துலங்கும் என்பதுடன் மேற்படி இறந்துபோன வாதியான வேலுச்சாமிகோனார் உயிருடன் இருந்தார் என்பது நன்கு துலங்கும் என்றும், அதேபோல் இறந்துபோன வாதியான வேலுச்சாமிக்கோனார் மனுதாரர்களுடைய கூற்றுப்படி 20.05.2013 தேதியிலேயே இறந்துபோயிருந்தால் மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யும்போதே அவருடைய இறப்பு தேதி மற்றும் இறப்பு சான்று குறித்து குறிப்பிட்டு இந்நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், வாதியான வேலுச்சாமிக்கோனார் எதிர்மனுதாரரிடமிருந்து இவ்வழக்கின் தீர்ப்பாணையின் படியான தொகையை உயிருடன் இருந்து பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை இந்நீதிமன்றத்தில் உரிய சாட்சிகள் மூலம் நிரூபித்த பின்பு தற்போது மனுதாரர்கள் மேற்படி இறந்துபோன வாதி வேலுச்சாமிகோனார் 20.05.2013 தேதியில் இறந்தார் என மோசடியாக பின்னிட்டு இறப்புசான்று தயார் செய்து அதனை காலபிற்பாடாக மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யவேண்டும் என்று கோரியும் இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்று இம்மனுக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:51:52 +0530

8) வாதியான வேலுச்சாமி கோனார் மனுதாரர் கூற்றுபடி 20.05.2013 தேதியிலேயே இறந்துபோய்விட்டாரா? இல்லையா? என்பது குறித்தும், வாதியான வேலுச்சாமிக்கோனார் எதிர்மனுதாரரிடமிருந்து இவ்வழக்கின் தீர்ப்பாணையின் படியான தொகையை உயிருடன் இருந்து பெற்றுக்கொண்டுள்ளாரா? இல்லையா? என்பது குறித்தும் E.P.No.17/2021 மனுவின் இறுதியிலேயே இந்நீதிமன்றத்தால் முடிவுக்கு வர இயலும். மேற்படி சங்கதிகள் குறித்து இம்மனுவில் இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலாது.

9) மனுதாரர்களால் E.A.No.02/2025 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் E.P.No.17/2021 மனுவின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) ஆகையால், E.P.No.17/2021 மனுவானது மறுதிறவு செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் E.A.No.02/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

11) இருப்பினும், மனுதாரர்களால் இம்மனுக்களானது காலதாமதமாக E.P.No.17/2021 மனு வாத உரைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில்கொண்டு நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**12) இறுதியாக**

**E.A.No.01/2025**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:52:01 +0530

தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 18.11.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 18.11.2025.

**<u>E.A.No.02/2025</u>**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to Proof and Relevancy) ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 18.11.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 18.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:52:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:- - இல்லை -

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.11 17:52:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.01/2025 and
E.A.No.02/2025
in
E.P.No.17/2021
in
O.S.No.113/2006
உத்தரவு (Draft / Fair)
நாள் : 11.11.2025